''அன்பளிப்பு''

BY

''சொற்பன உலகம்''

PUBLISHED BY

THE SARADHA PUBLISHING HOUSE.

(1939)

PRINTED AT
THE SRI ANANDAVALLI PRESS,
DEVAKOTTAI.

"அன்பளிப்பு"

BY

"சொற்பன உலகம்"

PRICE FOUR ANNAS

PUBLISHED BY
THE SARADHA PUBLISHING HOUSE.
(1939)

பதிப்புரை

இஃது திரு V. இராமநாதன் அவர்கள் இயற்றித்தந்த "சொற்பன உலகம்" என்ற கற்பனைக் கதையின் பொருட்டுப்பிறந்த "அன்பளிப்பு". இதற்குக் கட்டுரைகள் நல்கிய தோழர்களுக்கு எங்கள் மனமார்ந்த வந்தனம் உரித்தாகுக.

THE SARADHA PUBLISHING HOUSE.

தமிழ்ப் பெண்மணிகளின் வீரம்.

"பாலகவி"
வயிநாகரம். வே. இராமநாதன் செட்டியார்,
தேவகோட்டை.

"வீரம்" என்பது அஞ்சத்தக்க இடத்தும் அஞ்சாது நிற்றற்குக் காரணமாகிய ஓர் மனக்கிளர்ச்சி. அது, உண்மை நெறியின் கண் ஒழுகுவோர், அவ்வுண்மை நெறி பிறழ்ந்தோர்தம் தீச்செயல்கண்டு பொறாராய், அவரை நல்வழி நிறுவற்பொருட்டும், அவரால் துன்புற்ற உயிரின் வாட்டம் தீர்த்தற்பொருட்டும் தனக்கு வரும் இன்னல்களுக்கும் அஞ்சாராய், நெறிவழுவாப் பெருஞ்சினத்தின் வலிதாங்கிப் புரியும் செயலுக்கு ஏதுவாயுள்ள மனவெழுச்சியாகும்.

பொது நிலைப்பட்ட வீரம் எல்லா உயிர்களிடத்தும் காணப்பெறுமேனும், அது, அறிவறிந்த மக்கண் மாட்டுளதாம் செந்நெறி நிற்கும் வீரம்போற்சீர்மைபயத்தல் இலதாதலின், ஈண்டு அறிவறிந்த மக்கண் மாட்டுள்ள வீரமே விளக்கப் பெறுவதாம்.

அம்மக்களுள்ளும், ஆண் மக்கள் பாலமைந்த வீரத்தினும் பெண் மக்களிடத்து நிற்கும் வீரமே பயன்றரும். ஆண்மகனின் வீரம் அவனளவோடு நின்றொழியும். பெண் மக்கள் பாற்பட்ட வீரமோ, தன்னளவிலமையாது கருவிலே நின்ற குழவிகளையும் சார்ந்து, அவற்றையும் மேம்படுத்தும். அஃதன்றி, மக்களுக்கு அறிவு வளரும் வரை அருகிருந்து வளர்ப்பவள் அன்னையேயாதலின், தனது வீரத்தை உணவோடு சேர்த்து அக்குழவிகட்டு ஊட்டுதற்கும் அவளே காரணமாகின்றனள்.

குழவிப்பருவத்திலே, வீர உணர்ச்சியோடு வளர்ந்த குழந்தை, தன் வாழ் நாள் முழுதும் வீரத்தோடு வாழும். "விளையும் பயிர்முளையிலே தெரியும்" அன்ரோ? புலிக்குருளைகள் பாய்ச்சலையும், மான்கன்றுகள் மருட்சியையும், மீன் குஞ்சுகள் நீஞ்சலையும் கற்றுக் கொடுப்போரின்றித் தங்கள் தங்கள் தாயின் குணங்களை இயற்கையாகவே அடையப் பெறுதலைக் கண்கூடாகக் காண்கின்ரோம். அது போல அன்னையினிடத்துள்ள வீரம் அவர் மாட்டுதிக்கும் மக்களுக்கும் வாய்ப்பதியல்பு.

வீரமில்லார் வாழ்க்கை பயன்றரும் வாழ்க்கையாகாது. ஆகவே, வாழ்க்கைக்கு வீரம் இன்றியமையாதது. வீரத்திற்கு அறிவு இன்றியமையாதது. அறிவோடு நடுநிலை திறம்பாமனத்துக்கண்தோன்றும் வீரம்போல நன்மை பயப்பது உலகில் வேறில்லை. அறிவில்லார் வீரத்தினும் தீய பயக்குந்தன்மையதும் இவ்வுலகில் வேறில்லை.

பெண் மக்களிடத்து வீரம், நீறுபூத்த நெருப்புப்போலடங்கியிருக்கும். இன்றியமையாமைக்கன்றி வறிதே அவர்கள் வீரம் வெளித்தோன்ருது. தோன்றினும், தூநெறிச் சார்பு பற்றியதாகக் காணப்படும். அன்றி, பெரும்பாலும் ஆத்திரப்பட்டு வீரம் காட்டும் ஆண் மக்கள் போன்றவரல்லர் பெண் மக்கள். பெண்கள் வீரத்தை மேற்கொள்ளார். கொண்டாராயின் "குணமென்னுங் குன்றேறி நின்ருர் வெகுளி" யொப்ப விரைவிற் பயனளித்துத் தணியுமே யன்றி வறிதே தணியாது அவ்வீரம்.

காவிரிப்பூம்பட்டினத்துக் கனதன வணிககுலத் துதித்த கற்பிற்சிறந்த பொற்புடையாளாங்கண்ணகியை யெண்

ணிப் பாருங்கள். பெண் மக்கட்கு வீரம் இல்லை யென்போரும், இருப்பினும் அது, வேண்டுவதில்லை என்போரும் தலை நாணா வீரச்செயல் புரிந்தாளன்றோ? எத்தகைய ஆண் மகனேனும் அரசன் முன் செல்ல அஞ்சுவன். அஞ்சாது சென்றானேனும், ஆத்திரங் காரணத்தால் நெறிபிறழ்ந்த செயல்களைச் செய்து, துன்புறுவன். என்னே அதிசயம்! சகிக்கலாகாக் கொடுங்கோன்மை புரிந்த மன்னனிடத்தும், நெறிபிறழாது சென்று வாயிற்காவலனுக்கறிவித்து, அரசனாணைபெற்றுட்சென்று, அவனை வினவியும் அவனது வினாக்களுக்கு விடையிறுத்தும், தான் செய்த குற்றமுணர்ந்த நெடுஞ்செழியனுயிர் துறந்தும் பொருளாய், வலக்கொங்கையைத்திருகி எறிந்து நகரை எரியூட்டினள்.

"அக்காலத்தும், நன்மாந்தரை இத்தீச் சுடாது தீத்திறத்தார் பக்கமே சேர்க" எனக் கூறினளெனின், அவளது பேரறிவும் பெரும்பொறையும் வரம்புகடவா வீரமும் எடுத்துரைக்க இயலுமோ?

இன்னும், போர்க்களத்துமகன், பகைவர்க்கஞ்சிப் புறமுதுகிட்டு ஓடினனெனக் கூறக்கேட்டு, "என் மகன் அவ்வாறியினனேல், அவன் பாலுண்ட இம்முலையை அறுத்திடுவலெனக்கூறிப் போர்க்களஞ்சென்று, ஆங்குக் குவிந்திருந்த பிணக் குவியல்களைப் புரட்டி, மார்பிற்பாய்ந்த வேலுடன் உயிர் துறந்துகிடந்த மைந்தனின் உடலங்கண்டு, அவனைப் பெற்ற காலத்தினும் பெரிதும் மகிழ்ந்தனள்." என்று புறநானூற்றுள் கூறப்பெற்ற தமிழணங்கின் வீரச்செயல் கேட்டு மயிர்க் கூச்செறியாதாருண்டோ?

"கெடுக சிந்தை கடிதிவள் துணிவே
மூதின் மகளி ராதல் தகுமே
மேனா ளுற்ற செருவிற் கிவடன்னை
யானை யெறிந்து களத்தொழிந் தனனே
நெருந லுற்ற செருவிற் கிவள்கொழுநன்
பெருநிரை விலங்கி யாண்டுப் பட்டனனே
இன்றும்
செருப்பறை கேட்டு விருப்புற்று மயங்கி
வேல்கைக் கொடுத்து வெளிது விரித்துடீஇப்
பாறுமயிர்க் குடுமி யெண்ணெய் நீவி
ஒருமக னல்லதை யில்லோள்
செருமுக நோக்கிச் செல்கென விடுமே"

தந்தை, மூன்றாம்நாட் போரில் யானை யெறிந்து களத் திறந்தும், முன்னாட் போரில் கணவன், நிரைவிலங்கிக் களத் தொழிந்தும் சென்றனராக, அன்றும் போர்ப்பறை கேட்டு விரும்பி, இவனொருமகனல்லாது வேறு துணையில்லோள், கருத்த ஆடையன், விரித்தகுஞ்சியன், உடுக்க அறியா இள மையனை வெளிதுடுத்துக் குடுமிக்கெண்ணெய் நீவி, வேல் கைக்கொடுத்துச் செருமுகநோக்கிச் செல்கென விடுப்பா ளேல் அப்பெண்மணியின் வீரம்பேசுந் தகையதோ?

மற்றும், செங்கட்சோழனையீன்ற பெருநிலக்கிழத்தி, கருவுயிர்க்கு ஞான்று நிமித்திகனொருவன் போந்து, "இக் கரு, காற்கடிகை தாழ்த்துவெளிப்படுமாயின் இவ்வுலகமுற் றும் ஆட்சிபுரியும்" எனக் கூறக்கேட்டுத் தன் கால்களிற் கயிறுகட்டுவித்துத் தலைகீழாய், வௌவால் நான்றெனத்தூங் கிக், குறித்த கடிகையிற் கருவுயிர்த்துத் தன் உயிர் நீத்த வீரச்செயல் கேட்டு வியவாதவருளரோ? காலந்தாழ்த்துப்

பிறந்தமையாற் கண் சிவப்பேறப்பெற்ற அச்சோழ மன்னனுக்கு அது காரணத்தாலன்றோ "செங்கண்ணன்" என்று பெயரமைந்தது உம். இவன் திருத்தொண்டத் தொகையில் "உலகாண்டசெங்கணர்" என்று சிறப்பிக்கோதப் பெறுதற்கும், செயற்கருஞ்செயல்கள் பல செய்தற்கும், அழியாப் புகழ்பெறுதற்கும் காரணம் அவனது வீரத்தாயன்றோ ?

மேலும் பூதபாண்டியனிறக்க, அவனது கற்புடைமனையாட்டி பெருங்கோப்பெண்டு, உடன்கட்டையேறத் துணிந்த செயலைத்தடுத்த பெரியோரை நோக்கி, அவள் "அறிவினாற் பெரியாராகாது கயன்மீனின் முகத்து முளைத்த முள்ளொப்ப வறிதே நரைத்த மீசையுடைய பெரியீரே" என்று இகழ்ச்சிதோன்றவிளித்து, "இவ்வீமத்தீ நுமக்கு நெருங்கற் கரிதாய்ச் சுடுக; எம்மை யொத்த பத்தினிப் பெண்டிராகிய அன்னப்பேடுகளுக்கு இத்தீ தாமரைப்பொய்கையாய் இன்பந் தருவதாகுக" என்று எரிபாய்ந்த வீரச்செய்தி வெள்ளிடைமலையன்றோ ?

தமிழ்த் தாயொருத்தி தன் மகன் பொருட்டுச் சிலருக் கேற்பட்ட கடன்களை வகுத்துக்கூறுகின்றாள். "பெற்று வளர்த்தல் தனது கடன். அறிவுடையவனுக்குதல் தந்தையின் கடன். விதியற்ற வழிகளிற்போகாது மேம்பட்ட ஒழுக்கமுடையவனுக்குதல் அரசன் கடன். வீரச்செயலுக்குத் துணைபுரிவதான வேல் செய்துகொடுப்பது கம்மியன் கடன். அவ்வேல் கொண்டுகளிறெறிந்து பெயர்தல் காளையாகிய மைந்தனின் கடன். என்னே இவள் தம் வீரத் திறமை?

இன்னும் காரைக்காலம்மையார் என்ற கடவுள் மூதாட்டியார் — முழுமுதற்சிவனால் "அம்மை" என்றழைக்கப்

பெற்ற மூதுரையாட்டியார் "கணவற்குப் பயன்கொடா அழகு இமைப்பொழுதும் உடலிற்றங்காதொழிக" எனப் பேயுருவெய்திய வீரச்செயல் பெண்பாலரிடத்துள்ள பெருந் திறலை விளக்குமன்றோ ?

இனித் திருநாவுக்கரசின் தமக்கையாராகிய திலகவதியார், தம்பெற்றோரால் தமக்குக் கணவரென வரிக்கப்பெற்றவர் போர்க்களத்திறந்தது கேட்டு உயிர்துறக்கத் துணிந்ததூஉம், பின்னர் தம்பியாராகிய அப்பரடிகளின்பொருட்டு உயிர் நிறுத்தி இச்சை துறந்து இறையருட்பணியை மேற்கொண்டதூஉம் ஒப்பற்ற வீரத்தினும் உயர்ந்த வீரமாக எண்ணப்படுவதொன்றே.

வீரமணியாம்பாரதியாரை ஈன்ற பெண்மணி நம் தமிழ் மகளன்றோ?

இத்தகைய வீரஞ்செறிந்த பெண்மணிகளை நம் தமிழகத் தன்றி வேறெங்குக் காணமுடியும்?

இவையனைத்தும் கற்பினையடிப்படையாகக் கொண்ட வீரம். அக்கற்போ காதலை அடிப்படையாகக் கொண்டது. அக்காதலும் அறிவை அடிப்படையாகக்கொண்டெழும். அவ்வறிவும் நுண்ணறிவோர் வாய்மொழியான் விளங்கிய இயற்கை யறிவாம். அவ்வியற்கையே கருவின் கண்ணமைப்பு. ஆகவே, மூடிண்ட தன்னியற்கையறிவைச் சான்றோர் வாய்மொழிகொண்டு துலக்கல் வேண்டும். அத்துலக்கிய அறிவுகொண்டு தனக்கேற்ற ஆடவனிடத்தே அவனது அறிவையும் திறலையும் ஆராய்ந்து, அன்புசெய்தல் வேண்டும். அதுவே காதல்.

அது அறிவறிந்த காதலாதலின் மாறுபடாது. ஒருக்கால் மாறினும் உடனே கூடும். உண்மைக்காதலாதலின் ஓரிடத்திற் சார்ந்தபின் மற்றோரிடத்துப் பற்றாது. மாறாக் காதல் நிலைத்து நிற்றலின், அக்கணவன்மார் கற்பித்தபடியே பெண்மணிகள் ஒழுகுவர். அவ்வொழுக்கமே கற்பெனப் படும்.

காதலை அடிப்படையாகக்கொண்டிருந்த கற்பொழுக்கம் நாளேற ஏற மாறுபட்டுக் கட்டுப்பாட்டை அடிப்படையாகக்கொள்ள ஆரம்பித்த காரணத்தால்தான் உயரிய பெண்மை நலங்கள், நம் நாட்டுப் பெண்மணிகளிடத்தில் காணக் கிடைக்கவில்லை.

காதலிற்றோன்றிய கற்பே செம்மையுடையதாகலின், இக்கற்பின் வாழ்க்கையுடைய மாதருக்கே, செந்நெறியிலகாச் செயலாகிய வீரத்தினது உண்மைதோன்றும். தோன்ற, அவ்வீர உணர்ச்சியே மேம்பட்டு நிற்குமாதலின், அதனையே தமக்குப் பூணாகக்கொள்வர். அவ்வீர வாழ்க்கை வாழ்வோரால் உலகம் நன்மை எய்தும்.

இனி, வீரமில்லாதார் உலகில் ஒருவரும் இலர். எல்லோரிடத்தும் வீரம் உண்டு. எனினும், அவ் வீரத்தின் தன்மையை உணராமாந்தர் பலருளர். இன்றைய நம் நாட்டுப் பெண்மணிகளுட் சிலர், வீரத்தின் தன்மையை அறிந்திருந்தும், பல கட்டுப்பாடுகளாற் கட்டுண்டு, வீரச் செயலிழந்து துன்பத்திலாழ்கின்றனர். பெரும்பாலும் அவர்களின் இன்ப வாழ்க்கையின் வாயில், மண்ணறைந்திருப்பதே அவர்கள் வீரம் குன்றியதற்குக்காரணம்.

நன் மனமுடைய ஒருவனுக்குத் தீநெறியொழுகுமொருவன் தன் மிருகவலிகொண்டு இன்னல் விளைக்கின், அந்நன் மனமுடையோன் தனக்கு ஆற்றல் இல்லாவிடத்து, அவ்

வின்னல்பொருளைப் நன்னெறிவிட்டு வஞ்சனையாலே அத்தீவினையாளனை வெல்லநினைக்கின்றான். இது உலக இயல்பு.

அதுபோல நன்மனமுடைய நம் நாட்டுப் பெண்மணிகளை "கட்டுப்பாடு" என்கின்ற பழக்கம் ஒன்றையே காரணமாகவைத்து அவர்களை ஒரு இயந்திரத்தினும் இழிந்த பொருளாக நினைந்து மனம்போனவாறெல்லாம் நடத்துவதே அவர்கள் வீரச்செயல் குன்றியதற்கும் பெண்மைப்பெருமை இழந்ததற்கும் காரணமாகும். "காக்கையேறப் பனம்பழம் வீழ்வதுபோலச் சிலருக்குமட்டும் இன்பவாழ்க்கை அமைகின்றது".

யானைமுதல் எறும்பீறாகிய அஃறிணைப் பொருள்களுங்கூடத் துன்பவாழ்க்கையை வெறுக்கின்றன. பொருளே இன்பத்திற்குக் காரணமென நினைத்து அறிவறிந்த பெண்மணிகளை அறிவில் காளைகட்கும் வலியிழந்த கிழவர்கட்கும் குரங்கின் கைக்கொடுத்த பூமாலையையொப்பத்தகுதியறியாது கொடுத்து அளற்றிலே அழுந்தவைக்கின்ற நம் நாட்டில் பெண்கள் எவ்வாறு வீரவாழ்க்கை வாழமுடியும்?

பெண்மக்கள் வீர வாழ்க்கை வாழ்வதற்கு "இன்பமே" காரணமென்பது எவரும் மறுக்கமுடியாத உண்மை.

இனி வீர வாழ்க்கையே மெய்வாழ்க்கை எனவும், அவ்வீரம் கல்வியறிவையும் காதல் உறுதியையும் அடிப்படையாகக்கொண்டதாகலின், அக்கல்வி, காதல்முறைகளை, வாய்மொழியாளர் நான்முறைபிறழாவகை எய்தி இன்புறுதலே மாதர்கடன் எனவும் இத்தகைய சிறந்த மாதர்கள் நிறைந்திருந்த காரணத்தால்தான் பண்டைக்காலத்து நம் நாடு எல்லா வகையாலும் மேம்பட்டு விளங்கிற்று எனவும் அம்மேம்பாடு இன்னும் உண்டாக இறைவன் திருவருள் முன்னிற்க எனவும் கூறி முடிக்கின்றாம்.

சுதந்தர தேவிகள்.

RM. SM. கதிரேசனார்.

சக்தி தேவிகளான தாய்மைத் தெய்வங்களின் பெற்றியைக் குறிப்பதே இக் கட்டுரையின் நோக்கம். உலகிடைத் தோன்றி வரும் மனித சமூகம், ஆண்–பெண் இருபால் இணைப்பிலேயே வளர்ச்சி பெற்று வருகின்றது என்பது வெள்ளிடைமலை. பெண்ணின்றி ஆணில்லை; ஆணின்றிப் பெண்ணில்லை ஆண்–பெண் உறவு பொன்னும் நகையும் போன்ற இயல்புடையது. ஆணும் பெண்ணும் உயிர் ஒன்றி ஒத்த பண்பில் உறுதலே, உலக வாழ்வுக்கு இன்றியமையாத பயன் தருவதாகும்.

பெற்றிமிக்க பெண் தெய்வங்கள்

செந்தமிழ் நண்பீர்! அருமைத் தமிழ் நாட்டிலே, பெண்மையைப்போற்றாத பேரறிஞர் எவரேனும் உளரோ? பெண்ணிடத்துள்ள தாய்மைச் சிறப்பை உணர்ந்த பெரியோரெல்லாம் பெண்மைக்குப் பெருமதிப்பு அளித்தனர். அழகுறையும் இன்ப அன்புத் தெய்வமான பெண்ணை பழந் தமிழர் சக்தி தேவிகளாக வணங்கினர். பெண்ணினுஞ் சிறந்த பொருள் உலகத்தில் பிறிதொன்றில்லையென்றுபோற்றினர். காரணம் என்னே? உலகிடைத்தோன்றிய யாவரும் தாய் வயிற்றிலேதான் ஜனித்தனர். தாயாக ஈன்று, தங்கையாக நேசித்து, தாசமாகக் காப்பவள் பெண்ணேயன்றோ? தாய்மைப் பெற்றியுள்ள பெண் தெய்வங்களை – அடியேனும் வணங்குகின்றேன்.

நான் பிறந்த நாட்டின் மாண்பு

பண்டு தொட்டே பெண்மையைப் போற்றிய செந்தமிழ் நாட்டில் நான் பிறந்தவன்; தமிழ்த் தாயின் கண்மணிச் செல்வி மணிமேகலை தோன்றிய நாட்டில் நான் பிறந்தவன்; கற்புத் தெய்வம் காரைக்காலம்மையார் தோன்றிய நாட்டில் நான் பிறந்தவன்; வீரச் செல்வி கண்ணகியார் உருவாகிய நாட்டில் நான் பிறந்தவன்; 'இல்லற மல்லது நல்லறமன்று' என்று பாடிப் போந்த பாட்டி ஔவையார் பிறந்த நாட்டில் நான் பிறந்தவன்; அன்பும் அறமும் அமைந்த இல்லற வாழ்வை ஈரடிக் குறளால் உலகுக்கு உணர்த்தியவள்ளுவனார் பிறந்த நாட்டில் நான் பிறந்தவன்; 'உயிரினும் இந்தப் பெண்மை யினிதடா' என்று பெருமாண்புடன் பாடிப் போந்த புலவர்மணி பாரதியார் பிறந்த நாட்டில் நான் பிறந்தவன்; பெண்தெய்வம், பெண்தெய்வம் என்று தாய்மையைப் போற்றும் தமிழறிஞர் கலியாணசுந்தரர் வாழும் நாட்டில் நான் பிறந்தவன். எனவே, பெண்மையின் பெருமை பற்றி சுதந்தர தேவிகளின் அருமை பற்றி எழுதப்புகுந்தமைக்கு மகிழ்ச்சி கொள்கிறேன்.

நல்லறங் கொண்டு இல்லறங் காத்த மரபினர்

ஆண் பெண் வாழ்விற்கு அடிப்படையாக வேண்டுவது, இன்றியமையாத ஒற்றுமை. பண்டு தமிழர் இல்லற மாண்பையும், பெண்ணின் பெருந்தகைமையையும், உள்ளொன்றிய ஒற்றுமை உணர்வையும் பெற்றிருந்தனர்; அத்தகையார் வாழ்விலே பேரின்ப மலர் அரும்பிற்று; இல்லற இன்பமாகப் பூத்தது; சமரஸ மணம் கமழ்ந்தது; நல்லறங் கொண்டு இல்லறங்காத்தனர்; சிவனும் உமையும் போன்று உட்கலப்புற்று வாழ்ந்தனர். இல்லறத்தால் பேறு பெற்ற பழந்

தமிழர் வழி வந்த இளந்தமிழர்களே! உலகுக்கு உயிர் நாடி யென்த் திகழும்—சக்தி தேவிகளின்,— பேரின்பத் தாயான பெண்மைத் தெய்வங்களின் பெற்றியினை உணருங்கள்.

அறியாமையில் ஆழ்ந்த பெண் ணுலகின் நிலை

உலக வாழ்வில் ஒரு பாதியாய பெண்ணினம் இது போழ்து எந்நிலை பெற்றிருக்கிறது? சொல்ல நினைத்தால் துக்கந்தான் உறும். ஆணுலகுக்கு அடிமைப்பட்டிருக்கிறது பெண்ணுலகு. அறியாமையில் ஆழ்ந்த பெண்களெல்லாம் ஆடவர்க்கு அடிமைப்பட்டிருக்கிறார்கள்; அடிப்பூதுவதற் குப் பழக்கப்பட்டிருக்கிறார்கள்; காமக்கிழத்தியாகக் கருதப் பட்டிருக்கிறார்கள்; சடப் பொருளாக நினைக்கப்பட்டிருக்கி றார்கள். இனி, ஆண் மக்கள் பெண்மக்களைத் தங்களுக்கா கத் தோற்றுவிக்கப்பட்ட 'சுகப் பொருள்' என்று பெருமை யாகக்கூடப் பேசிக் கொள்வார்கள் போலிருக்கிறது. இத்த கைய சிறுமை தற்காலப் பெண்ணுலகில் தாண்டவமாடிக் கொண்டிருக்கிறது; என்னே பெண்மைக் குற்ற பேரிழிவு!

பெண் ணுலகுக் கேட்டிற்கு எவர் காரணர்?

பண்டை நாளில் பெண்ணுலகு பெற்றிருந்த பெருமை யை இடைக்காலத்து ஆண்மக்கள் தங்கள் சுயநலத்தின் பொருட்டு பாழாக்கி விட்டனர்; பெண்ணரசிகளை யெல்லாம் அடிமை விலங்கிட்டு, அறியாமையில் ஆழ்த்தினர்; சுயநல, சுகங்கள் காரணமாக ஆண்மக்கள் பெண்மைக்குப்பெருங்கேடு நிகழ்த்தினரென்றே சொல்லல் வேண்டும். முன்னை நாளில் ஆண்மகனோடு ஒத்த கல்வி பெற்று, உரிமை யின்பம் நுகர்ந்து வந்த செந்தமிழ்ச் செல்விகள், இற்றை நாளில் சிறுமை வாழ் வில் சிதைந்து, தேசப்பற்றற்று, தாய்மைச் சிறப்பிழந்து—

ஊமையராய்ச் — செவிடர்களாய் உண்பதும், உறங்குவதும் வாழ்வின் பயனென மடமை நினைவில் மயங்கி நிற்கின்றனர்.

பண்டு தமிழ்க்குடிப் பெண்டிரின் அருமை

தமிழர்களே! உண்மையாய்ச் சொல்லுகின்றேன். தெய்வ வடிவாகவும், அன்புக்கு நிலைக்களனாகவும் உள்ள பெண் தெய்வங்களை சிறுமை செய்து, கொடுமை நிகழ்த்தல் பெரும் பாவம் யென்று பல்லாயிர முறை வலியுறுத்துகின்றேன். மகளிரை இழிவு செய்தல் மடமையாளரின் மதியீனமன்றோ? தமிழம்மையின் முன்னைய புதல்விகள் கல்வி கற்றிருந்தனர்; அறிவு பெற்று விளங்கினர்; ஆண்மை கொண்டு நடந்தனர்; குணக் குன்றுகளாய்த் தோன்றினர்; கற்புக் கரசிகளாய்த் திகழ்ந்தனர்; ஒழுக்கச் செல்விகளாய்ச் சிறந்தனர்., வீர வனிதைகளாக வாழ்ந்தனர்; சரிநிகர் சமானமாக உரிமை கொண்டு நின்றனர். பண்டு தமிழ்க்குடிப் பெண்டிரின் பெருமை குறித்துப் பேசின்—மிக விரியும்; பழமை பேசிப் பயனென்ன தமிழர்களே!

சிறுமை யுற்றதற்கு அறியாமையே காரணம்

பெரிதும் பெருமை பெற்றிருந்த பெண் தெய்வங்கள் இதுகால், மிகவுப் சிறுமை யுற்று, தெய்வ இயல்பிழந்து, அறியாமையில் அழுந்தி, உயிர்நாடி துடிக்கக் காட்சியளிக்கின்றார்கள். காரணம் என்ன? ஆண்மகன் பெண்மகள் உரிமையைக் கடிந்தமையா லென்று கூசாமற் கூறலாம். ஆணுலகத்தாரின் அடக்குமுறை பெண்ணுலகில் புகுந்தது; வலிய ஆணின் மூர்க்கச் செயல் மென்மைப் பெண்ணை இழிவு படுத்திற்று. அறிவும் ஆற்றலும் நிறையப் பெற்ற அணங்குகளெல்லாம், ஆண்மை நிகழ்த்திய கொடுமையால் ஆக்கமும்

ஊக்கமு மற்று, காமப்பொறிக்கூடுகளாக வாழ்க்கை நடாத்தப்படவாயினர். சுருங்கச் சொன்னால், அறியாமைப் பேய்—பெண்ணுலகை ஆட்சி செய்கிறதென்றே கூறிவிடலாம். இதற்கெல்லாம் எவர் காரணர்? ஆடவர் என்றே ஆயிரம் முறை சொல்கின்றேன்.

பெண் பாவம் பெரிதும் பொல்லாதது

மாதர் உலகை இழிவு செய்து மகத்தான பாவத்திற்கு ஆளான ஆணுலகம், இது போது நாட்டுரிமை யற்று, வாழ்க்கையிலே மகிழ்ச்சியின்றி—அயலார் பிடியில் அகப்பட்டுத் தவிக்கின்றது. பெண்ணுலகைக் கெடுத்த பெரும் பாவத்தால் தேசச் செழுமையும் பாழாகிவிட்டது. "பெண்பாவம் பொல்லாதது" என்று நம்மவரிடையே ஒரு பழமொழிகூட உண்டல்லவா?

பெண்மையின் பொலிவை ஆண்மகன் உணர்க

ஆண்கள் அநுபவிக்கும் அத்தனை உரிமையையும் பெண் பெற்றால் நாடு நலமடையும்; நாட்டு நலன் சிறப்பாக ஓம்பப் படும். பெண்ணுலகக் கேட்டால் ஆணுலகு வலிமை யிழந்தது என்பதை ஆண்மகன் உணரட்டும்; பெண்ணிடத்துள்ள தெய்வத் தன்மையை ஆண்மகன் உணர்ந்தால், இடர்க் கட்டின்றி இன்பமாக வாழலாம். ஆண்மக்களுக்கும், பெண் மக்களுக்கும் அறிவில் வேற்றுமை யுண்டோ? எத்தகைய வேற்றுமையும் இல்லை. மேலும் மிகைபடாது சொல்லின் பெண்பாலார் நுண்ணறிவு மிக்கவர் என்பது உண்மை.

"பெண்ணுக்கு விடுதலை நீரில்லை யென்றால்
பின்னிந்த உலகினிலே வாழ்க்கையில்லை"

என்று பாவலர் பாரதியார் பாடிப் போந்த பெருமையைத் தற்கால ஆண்மக்கள் உணரட்டும்.

மகளிர் உரிமையைச் சிறைப்படுத்தல் மடமையன்றோ?

தமிழர்களே! தாய்மைக் குரிய பெண்ணைப் போற்றுங்கள்; 'சர்வம் சக்தி மயம் ஜகத்' என்று சாற்றுங்கள்; மகளிர் உரிமையைச் சிறைப்படுத்தும் மடமைக்கு ஆளாகாதீர்கள். இடைக்காலத் தன்னலத் 'தியாகிகளால்' பெண்ணுலகு அடிமைப்பட்டது. அறிவுச் செல்விகளை யெல்லாம் அறியாமையில் ஆழ்த்தினர் அந்நாள் தமிழர். நேயர்களே! கால நிலையை உணருங்கள்; பெண்மக்கள் நிலையைப் பண்படுத்த முயலுங்கள். இந்த இருபதாம் நூற்றாண்டிலாதல் பெண்ணுலகு உரிமை பெற்றால் ஆணுலகும் வலிமையுறும் என்று சொல்ல வேண்டுவதில்லை.

பெண்மக்கள் நிலைபற்றி தமிழறிஞர் கருத்து

தற்காலப் பெண்மக்கள் எப்படி யிருக்கிறார்கள்? தேசப் பற்றும், சுதந்தர உணர்ச்சியும் இல்லாத பெண்மக்கள்—உலக நிலை தெரியவாராது வீட்டுப் பூச்சியாக விளங்குகிறார்கள். பெண்ணுலகு நிலை பற்றி திரு. வி. கலியாணசுந்தரர் சொல்வதைக்கேளுங்கள்:—

பெண்மக்கள் கல்வியறிவின்றியும் தொழில் ஞானமின்றியும் வளர்வது மரம் வளர்வது போலாகும். மரத்தைப் போல வளர்ந்துவரும் பெண்மக்களால் குடும்பம் வறிய நிலை அடைந்து கொண்டே போகும். கல்வி யறிவில்லா ஒருத்தி, நாயகன் வருவாய் நிலையைக் கவனிப்பதில்லை. தன் நாயகன் கடன் பட்டோ பிச்சை யெடுத்தோ, மானமிழந்தோ தனக்கு நகை வாங்கிப் பூட்ட வேண்டு மென்றே அவள் கருதுகிறாள். இவ் வறியாமை யுடைய பெண்மக்கள் தொகை நமது நாட்டில் நிரம்பியிருக்கிறது. பொருளின் அருமையும், பொருளாதார நிலையும் அவளுக்கு தெரிந்திருக்குமாயின், அவள்

புருஷன் மானத்தைப் போக்கடிக்க மாட்டாள். மூடப் பெண் மக்களால் குடும்பங்கள் வறுமையால் பீடிக்கப்படுகின் றன. நாயகன் வருவாய்க்குத் தக்கவாறு செலவு செய்ப வளே சிறந்த வாழ்க்கைத்துணை என்று திருவள்ளுவர் கூறி யிருக்கிறார். குறள் முதலிய நூல்களை நம் பெண்மக்கள் பயின்று அறிவு வளம் பெறாமையால், நமது நாடே சிறுமை யுற்று நலிகிறது.

தேசபக்தியை எழுப்பச் சிறந்தவர்கள் பெண்மக்கள்

'பெண்மக்கள் போதிய பொருளாதார அறிவு வாய்க்கப் பெறுவார்களாயின், அவர்களும் தேசத் தொண்டில் தலைப் படுவார்கள். பொது நலத்தின் பொருட்டு, நாயகனுக்கு ஏதாவது இடையூறு நேருங்காலத்து, நாயகியின் உதவி யும், உற்சாகமும் துணை செய்யும். பெண்மக்கள் உள்ளத்தில் தேசபக்தி பதியுமாயின், அவர்கள் தங்கள் நாயகன்மார் களைத் தேசத்தொண்டில் ஈடுபடுமாறு தூண்டுவார்கள். தங்கள் சொற்படி நாயகன்மார்கள் நடவாவிடின், தாங்கள் அவர்களோடு ஒத்துழைக்க மறுத்து விடுவார்கள். பெண் மக்கள் தேசப்பற்றுக் கொள்வார்களாயின், ஆண்மக்களில் தேசத் துரோகிகள் குறைந்து போவார்கள். ஆதலால் பெண்மக்களும் எல்லாத் துறைகளிலும் தலைப்பட்டு உழைத் தல் வேண்டும்'.

தைரியம் பெறுங்கள் தமிழ்நாட்டுப் பெண்மணிகளே!

இறுதியாக, பெண்மணிகளுக்கும் ஒரு வார்த்தை. பெண்மைத் தெய்வங்களே! சுதந்தர தேவிகளே! தமிழம் மையின் இன்னுயிர்ப் புதல்விகளே! எழுங்கள்; தாயின்

மணிக் கொடியைக் கரத்தில் பிடியுங்கள். உங்களின் உரிமை நாடி சுதந்தரக்கிளர்ச்சியைத் துவக்குங்கள். அறியாமைச் சேற்றில் அழுந்தாதீர்கள்; அறிவுச்சுடரைப் பாரெங்கும் பரப்புங்கள். உங்கள் குலத்திலே, உங்களின் தாய்த்திருநாட்டிலே, அஞ்சா நெஞ்சு பெற்ற ஆண்மைச் செல்வி சந்திரமதி தோன்றினாள்; குணத்திலகம் சீதை பிறந்தாள்; வீரப் பெண்மணி கண்ணகியார் தோன்றினாள்; உயிரினும் உயர்வென ஒழுக்கம் போற்றிய மணிமேகலை வாழ்ந்தாள்; அறிவுக்கரசி தமயந்தி வதிந்தாள். இத்தகைய பெண் குலத்துப் பெருமணிகள் வழிவந்த நீங்கள் இதுபோது எந்நிலையடைந்திருக்கிறீர்கள்? ஆடவர்கள் ஒழுக்கம் காக்குமாறு உங்கட்கு உபதேசம் செய்கிறார்கள். ஒழுக்கம் காத்தல் இருபாலர்க்கு முரிய கடமையன்றோ? எனவே, நீங்கள் ஆண்மக்களிடம்,

‘ஆணெல்லாங் கற்பைவிட்டுத் தவறு செய்தால்
அப்போது பெண்மையுங் கற்பழிந்திடாதோ?

என்று தைரியமாகக் கேளுங்கள்.

பண்டு பெருமையை இன்றே பெறுக

செந்தமிழ் செல்விகளே! எல்லா வகையிலும் முதன்மை பெறுதற்கு முந்துங்கள். சிறுமைப் படுத்தும் எவ்வினைக்கும் உட்படாதீர்கள். உங்கள் உடலிலே, நாடி நரம்பிலே ஆண்மைக் குருதி பரவட்டும்; வீரம் செறியட்டும். ‘நாங்கள் சக்திமார்கள்; தாய்மைத் தெய்வங்கள்’ என்று உலகோர்க்கு உணர்த்துங்கள். காரைக்காலம்மையாரின் அன்பும், கண்ணகியாரின் வீரமும், மணிமேகலையின் அறமும் பழந்தமிழ் நாட்டை நலம்பெறச் செய்தது என்று நான் சொல்வதால் பயனென்ன? அந்தப் பெண்மணிகள் வழித்

தோன்றல்களாகிய நீங்களல்லவோ பண்டைப் பெருமைக்கு இலக்காக விளங்க வேண்டும்.

பெண்ணுலகு முற்போக்கிற்கு பேரறிஞர் உழைப்பர்

தாய்மைப் பெற்றியுள்ள சகோதரிகளே! சுதந்தரம் எங்கள் பிறப்புரிமை என்று முழக்குங்கள்; கருத்தொருமித்த காதலனைத் தேர்ந்தெடுக்கும் தன்னுரிமையை முன்னே பெறுங்கள். தேசச் செல்வத்திற்கும், பிற செருமைகளுக்கும் நாங்களே காரணத் தெய்வங்களென்று கம்பீரமாகக் கர்ஜியுங்கள். உங்களின் அடிமைத் தளையை அகற்ற தமிழ் நாட்டிலே பேரறிஞர் உள்ளனர்; பாவலர் உள்ளனர்; பத்திராதிபர் உள்ளனர்; எழுத்தாளர் உள்ளனர்; சொற்பொழிவாளர் உள்ளனர்; சீர்திருத்தக்காரர் உள்ளனர்; புது யுக மலர்ச்சி மிக்க தற்கால வாலிப வீரரெல்லாம் உள்ளனர். முற்போக்கு சக்தி படைத்த இவர்களெல்லாம் உங்களின் (பெண்மையின்) நலமே பெரிதென ஓம்பி, உரிமை வழங்க உழைப்பரென்பது திண்ணம்.

'ஆணும் பெண்ணும் நிகரெனக் கொள்வதால்,
அறிவி லோங்கியிவ் வையந் தழைக்குமாம்;
பூணும் நல்லறத் தோடிங்கு பெண்ணுருப்
போந்து நிற்பது தாய்சிவ சக்தியாம்;
காணும் அச்சமும் நாய்கட்கு வேண்டுமாம்;
ஞான, நல்லறம், வீர சுதந்திரம்
பேணும் நற்குடிப் பெண்ணின் குணங்களாம்;
பெண்மைத் தெய்வத்தின் பேச்சுக்கள் கேட்டீரோ!'

என்று பெண் நீர்மைபற்றி பாடிப் போந்த வீரக் கவிக் குயில் பாரதியார் பரப்பும் விடுதலே முழக்கத்திற்கு இன்றே இலக்காகுங்கள்; ஆண்களோடு பெண்களும் சரி நிகர் சமானமாக

வாழ்வோ மிந்த நாட்டிலே யென்று உறுதியாகச் சங்கற்பஞ் செய்துகொள்ளுங்கள்.

தாய்மைச் சிறப்புள்ள பெண்மைக்கு வணக்கம்

தமிழ் நாட்டுப் பெண்மணிகளே! வாருங்கள்; தமிழ் வீரத் தாயை அரியணை யேற்றும்; சுதந்தர தேவியாக அன்னை செங்கோலோச்சட்டும். தமிழ்த் தாய் ஈன்ற ஆண் பாலாரும், பெண்பாலாரும் சுதந்திர வேட்கையினராய்ச் சமரச சன்மார்க்கத் தொண்டுபுரிய இன்றே தலைப்படுவோம். பெண்மைத் தெய்வங்களே! ‘தமிழ் நாட்டுப் பெண்மணிகளெல்லாம் சுதந்தர தேவிகள்’ என்று வெளி நாட்டார் வணங்குதல் வேண்டும். அத்தகைய பெருமை பெறுதற்கு முயற்சியுங்கள். தமிழம்மை வாழ்க; பெண்ணுலகு வாழ்க; பெண்மையைப் போற்றும் நேயர்கள் வாழ்க; பெண்மைக்கு நமஸ்காரம்; தாய்மை நிறைந்துள்ள பெண் தெய்வங்கட்கு வணக்கம்.

சங்கீதத்தின் பெருமையும்—
—நமது கடமையும்

ஸ்ரீ சோம இராமநாதன்,
தேவகோட்டை.

"சொற்பன உலகம்" என்ற அரிய நாவலை வெளியிட்ட சாரதா பிரசுராலய அன்பர்கள் என்னுடைய கட்டுரை ஒன்று வேண்டுமென்று கேட்டுக்கொண்டதற்கு, சரி என்று ஒப்புக்கொண்ட பின்னர் எதைப்பற்றி எழுதலாம் என்ற சிந்தனை எனது மனதில் எழுந்தது. நான் கட்டுரை எழுதிப் பழக்கம் உள்ளவனில்லை. பல கட்டுரைகளை அதிகமாகப் படித்து அதன் பயனாக அறிவு வளர்ச்சி பெற்றவனுமில்லை. எனவே, எனக்கு மிகவும் பிரியமான சங்கீதத்தைப்பற்றி ஏதாவது சில வரிகளை எழுதி முடித்துவிடலாம் என்று கருதி எழுதுகின்றேன்.

சங்கீதம் பொதுவாக எல்லோரையும் மகிழ்விக்கச் செய்வது. கவலையைப் போக்குவது. வியாதிக்கு ஓர் மருந்து. தன்னைத்தானே சந்தோஷிக்கச் செய்வதில் நிகரற்றது. குழந்தைகள் அழ ஆரம்பித்துவிட்டால் இனிய கானத்திலே அழாமல் தடுத்துவிடக்கூடியது. கொடிய விஷப்பாம்பாகிய நல்ல பாம்பும் அதன் கானத்தினால் வசப்படக்கூடியது. நகர்த்த முடியாத பெரிய பாராங்கல்கூட இக் கான விசேஷத்தினால் பெயர்க்கக்கூடியது இவ்வுயரிய சங்கீதம். கண்ணனுடைய குழலோசையைக் கேட்ட பசுக்கள் அசைவற்ற மரங்கள்போல் மெய் மறந்து நிற்பதைப் படத்தில் காண்கின்றோம். இராவணேஸ்வரன் தனது சாம கானத்தினால்

ஈஸ்வரனுடைய சாபத்தினின்றும் விலகினன் என்று சரிதம் கூறக் கேட்டிருக்கின்றோம். மற்றெந்தக் காரியத்திலும் நாம் சீக்கிரம் சலிப்படைந்துவிடுவோம்; ஆனால், சங்கீதத்திலோ சலிப்படையவே மாட்டோம். சங்கித ஞானமானது பூர்வ ஜன்ம விசேஷத்தினால் வரக்கூடியது. தெய்வீக சம்பந்தமானது. இவ்வுயர்ந்த கலை இன்று சில கிராமபோன் ரிக்கார்டுகளிலும், டாக்கீகளிலும், நாடகத்திலும், ஆபாசமாகப் புகுத்தப்பட்டிருப்பதைக் காண அதிகமாக நாம் வருந்தக்கூடியவர்களாகவிருக்கின்றோம்.

தமிழ் டாக்கீகளின் ஆரம்ப காலத்திலே 60 பாட்டுகள் 90 பாட்டுகள் என்று தலை வரிசை போட்டு கதைச் சுருக்கம் வெளிவரும். அதைப் பார்த்தவுடன் ஜனங்கள் களிப்படைந்து போய்வருவார்கள். பின்னர் பாட்டுக்களை அதிகமாகப் புகுத்துவதினால் பலனில்லை என்று கண்ட சினிமா உற்பத்தியாளர்கள் கூடியவரை பாட்டைக் குறைத்துவிட்டது மிகவும் மகிழ்ச்சிக்குறியதாகும். ஹிந்திப் படங்களைப் பாருங்கள். எங்தெந்த இடங்களில் சங்கீதம் தேவையோ, அந்தந்த இடங்களில் மட்டும் பாட்டுக்கள் இருக்கின்றன.

இனி கிராமபோன் ரிக்கார்டுகளை எடுத்துக்கொள்வோம். கீழ்த்தரமான, —தமாஷ் நிறைந்த— மெட்டுகள் அடங்கிய ரிக்கார்டுகள் வெளிவந்து, அதில் ஜனங்கள் மோகமாகி ரிக்கார்டுகளை வாங்கினார்கள். பின்னர் அத்தகைய ரிக்கார்டுகளுக்கு மதிப்பில்லை என்று தெரிந்ததும் அடியோடு நின்றுவிட்டது. இப்பொழுது மேற்கண்ட ரிக்கார்டுகள் ரூபாய்க்கு ஐந்து கிடைக்கும்.

நிற்க, சங்கீதக் கச்சேரிகளில் தமிழ் பாட்டு ஒன்று இரண்டு மருந்துக்குக்கூடப் பாடுவதில்லை. தமிழ்ப் பாட்டுகள்

வேண்டும் என்று பெரிய கூச்சல் கிளம்பியதும் சங்கீத வித்வான்களுக்கு மனது இரங்கி கச்சேரிகளில் ஒன்று இரண்டு பாட்டுகள் பாடுகின்றார்கள். சங்கீதக் கச்சேரிகளில் அதிகமா தமிழ்க் கீர்த்தனங்கள் பாடுபவர் சித்தூர் ஸ்ரீ சுப்பிரமண்ய பிள்ளை அவர்கள்தான். அவர்கள் பாடும் எந்தக் கீர்த்தனங்களும் எல்லோரும் ரஸிக்கும்படி அவ்வளவு திறமையாக இருக்கும். சாஹித்தியத்தை மிகத் தெளிவாக உச்சரிப்பவர்களில் ஸ்ரீ சுப்பிரமண்ய பிள்ளை அவர்களுக்கு நிகரில்லை என்றால், அது மிகையாகாது!

சில வித்வான்கள் இருக்கின்றார்கள். பெயரைக் குறிப்பிட விரும்பவில்லை. அவர்கள் சாஹித்யத்தை அப்படியே சாப்பிட்டுவிட்டு, ராகத்தையும், தாளத்தையும் சரிப்படுத்தி வைத்துக்கொண்டு, கச்சேரியை முடித்து விடுவார்கள். இது எவ்வளவு கேவலம் பாருங்கள்! சாஹித்தியத்தை ஒழுங்காக உச்சரித்து ராக பாவங்களுடன் பாடினால், நமக்கு எவ்வளவு மகிழ்ச்சியாகவிருக்கும்! கோபாலகிருஷ்ண பாரதி, வேதநாயகம் பிள்ளை, சுப்பராமய்யர், பாபநாசம் சிவன், பாரதியார், தேசிய விநாயகம் பிள்ளை முதலியோர் தமிழ்க் கீர்த்தனங்கள் நிறைய நல்ல கருத்துக்களுடன் பாடி இருக்கின்றார்கள். அத்தகைய கீர்த்தனங்களைக் கையாளவேண்டுமென்று சங்கீத வித்வான்களையும், சங்கீத ரசிகர்களையும், பொது ஜனங்களையும் கேட்டுக்கொள்ளுகின்றேன்.

சங்கீத ஞானமில்லாதவர்கள் ஈவு, இரக்கமில்லாதவர்கள்; கொலைஞர்கள், என்றுகூட ஆங்கிலப் பேராசிரியரும் பிரபல நாவலாசிரியருமான ஷேக்ஸ்பியர் கூறி இருப்பதை இங்கு ஞாபகப்படுத்த விரும்புகிறேன். ஒரு காலத்தில் எனது நண்பர்களில் ஒருவர், தவுல் வாசித்துக்கொண்டிருக்கும்

போது என்ன ராகத்தில் வாசிக்கிறுன்? என்றும், மற்ஞெருவர் தோடி ராகத்தை எழுதித் தரும்படியும் கேட்டதும் வியப்பாகவிருக்கும்! ஆனல் இப்போது மேற்கண்ட நண்பர்கள் இருவர்களும் சங்கீதத்தில் அபார ஞானம் உடையவர்களாகவிருக்கின்ருர்கள் என்றுகூறக் களிப்படைகின்றேன்!

கச்சேரிகளில் பக்க வாத்யங்கள் அதிகமாக இருந்தால், கச்சேரிகள் அவ்வளவாக சோபிக்கவில்லை என்பதை ரசிகர்கள் நன்கறிவார்கள். கடம், கொன்னக்கோல், டோலக், மோர்சிங், கெஞ்சிரு முதலிய பக்க வாத்தியங்கள் ஏக காலத்தில் இருப்பின் கச்சேரியை கொலை செய்துவிடுகின்றன. கூடியவரை பக்க வாத்யங்கள் குறைக்கப்படவேண்டும் என்பது எனது ஆசை.

நாட்டுக்கோட்டைச் சமூகத்தார் ஒரு காலத்தில் பெருமைக்காக, கல்யாணம் முதலிய விசேஷங்களில் கச்சேரி வைப்பது வழக்கம். ஆனல் கச்சேரியை அவர்கள் ரசிப்பது கிடையாது. வித்வான்கள் அவர்கள் இஷ்டப்படி முழுதும் தெலுங்கு (புரியாத) கீர்த்தனங்களைப் பாடிவிட்டு, கடாசியாக ஒரு திருப்புகழ், ஒரு தேவாரம், ஒரு காவடிச் சிந்து, ஒரே ஒரு தில்லாஞ பாடி முடித்துவிடுவார்கள். ஆனல் இப்பொழுதோ நமது சகோதரர்கள் சரியாக வேலை வாங்குவதுடன் ரசிப்பவர்கள் எண்ணிக்கை அதிகமாகிவிட்டது. இதிலிருந்து சங்கீத ஞானம் நம்மிடையே எவ்வளவு தூரம் பரவி இருக்கின்றது என்பதைக்காண அதிக மகிழ்ச்சியுள்ளவர்களாகவிருக்கின்றேம்.

சுதி மாதா, லயம் பிதா என்று சொல்லி இருப்பதி னாலே சங்கீதத்திற்கு சுதியும் லயமும் மிகவும் பிரதான மாகும். சிலர் நன்றாகப் பாடுவார்கள்; ஆனால் சாரீரம் நயப் படுவதில்லை. சிலருக்குச் சாரீரம் நன்றாகவிருக்கும்; ஆனால் சுதி சுத்தம் லய சுத்தமிராது. இது வழக்கத்திலிருந்தாலும் கூடியவரை அப்யாசப்படுத்தினால் பயன் கிடைக்குமென்பது எனது எண்ணம்.

மேல் நாட்டிலே சங்கீதக்கலை மிகவும் அபிவிருத்தி யாக இருப்பதாகச் சொல்லுகிறார்கள். நமது நாட்டில், தென்னிந்தியாவில், சிறப்பாக தஞ்சை ஜில்லாவில் சங்கீத ஞானம் படைத்தவர்கள் அதிகமாக இருக்கின்றார்கள். நமது பகுதிகளிலும் சங்கீத ரஸிகர்களும் பாடுபவர்களும் வர வர அதிகமாகிக்கொண்டே வருகின்றார்கள். சங்கீ தத்தை பள்ளிக்கூடங்களில் கட்டாய பாடமாக வைத்தல் மிகவும் பயனுடையதாகும். ஒவ்வொரு ஊரிலும் சங்கீத சபாக்கள் ஏற்படுத்தி அதன் மூலம் சங்கீதக் கலையை அபி விருத்தி செய்ய ஒவ்வொருவரும் முயற்சி செய்யவேண்டும். இதற்குத் தனவந்தர்கள் நிறைய உதவி புரியவேண்டும். உழைப்பாளிகள் மிகவும் பாடுபடவேண்டும். அப்படிச் செய்தார்களேயானால் சங்கீதக்கலை சீக்கிரம் அதி உன்னத ஸ்தானத்திற்கு வந்துவிடும் என்பதில் சந்தேகமில்லை.

திருவையாற்றிலே தை மாதத்தில் வருகின்ற புஷ்ய பகுள பஞ்சமி திதியில் ஸ்ரீ த்யாகப்பிரும்ம உத்சவம் ஆரம்ப மாகி பத்து தினங்கள் மிகச் சிறப்பாக நடைபெறுகின்றது.

அதற்குத் தென்னிந்தியாவில் பிரசித்திபெற்ற வித்வான்கள் எல்லோரும் விஜயம் செய்து கச்சேரி செய்கின்றார்கள். சங்கீத ரஸிகர்களுக்கு இது ஓர் நல் விருந்தாகும்.

செவிக்குண வில்லாதபோழ்து
சிறிதுவயற் றிற்குமீயப்படும்

—திருக்குறள்.

சங்கீதக்கலை வளர்க!

"பாவையும் பைங்கிளியும்"

கொழும்பு ஸ்ரீ எம். ஆர். சேதுராமன்.

நறுமணம் கமழும் இனிய சோலையில் மெல்லிய தென்றல் வீசுகின்றது. செந்தேன் சொரியும் அச்செம்மலர்ச் சோலையில் வண்டுகள் பண்ணமைந்தவாறு இசைபாடுகின்றன. அழகிய மயில்கள் தோகையை விரித்து ஆடுகின்றன. பஞ்சவர்ணக் கிளிகள் கொஞ்சி விளையாடுகின்றன. இவ்வாறு இயற்கையில் வாழும் இன்னுயிர்களெல்லாம் இன்புற்று அமர்ந்த இனிய சோலையை நோக்கி ஓர் மங்கை மலர் கொய்ய வருகின்றாள். அம்மங்கை,

"கற்பகத்தின் பூங் கொம்போ
காமன்தன் பெரு வாழ்வோ
பொற்புடைய புண்ணியத்தின்
புண்ணியமோ புயல் சுமந்து
விற்குவளை பவள மலர்
மதிபூத்த விரைக் கொடியோ
அற்புதமோ சிவனருளோ
வறியேன்"

என்று அதிசயிக்கத்தக்க பேரழகோடு பூஞ்சோலையிற் புகுந்து அங்கு நிறைந்து நின்ற இன்னொலியை நுகர்ந்து இன்புற்றாள். இனிமையும் அழகும் வாய்ந்த இயற்கையில் இலங்கும் இறைவனது வடிவைக் கண்டு வியந்தாள். மயிலாய் நின்றுடுவதும், குயிலாய் நின்று கூவுவதும், அஞ்சுகமாய் நின்று கொஞ்சுவதும், மலராய் நின்று மணங் கமழ்வதும்

எங்கும் நிறைந்த இறைவனே என்னும் உண்மை அம்மங்கையின் உள்ளத்தில் உதித்தது. ஆதியுமந்தமு மில்லா அரும் பெருஞ் சோதியை அறிந்தாள். உள்ளுவாருள்ளத்தில் உலப்பிலாத் தேன் சொரியும், உயரிய செம் பொருளை உணர்ந்தாள், எழில் நலம் வாய்ந்த இறைவனை நினைந்து நினைந்து, தன் உள்ளத்தில் அப் பெருமானை ஓர் உயர் ஓவியமாய் எழுதி மகிழ்ந்தாள். அன்பினால் நினையும் அடியாரது உள்ளத்தில் உதிக்கும் ஒளியாய இறைவன் அம்மங்கையின் மனக்கண்ணில் தோன்றினான். அப் பெருமானது சடையும் பவள மேனியும் மங்கையின் மனதைக் கவர்ந்து விழுங்குவன வாயின. சோலை மலர்களிற் சுழன்ற வண்டுகள், துளித் தேனை மாந்தித்திளைக்குங்கால் அம்மங்கை இறைவனது ஆனந்தத்தேனை அருந்தி மகிழ்ந்தாள். அங்கு அமர்ந்த பறவைகள் தேமாங் கனியைத் தின்று திளைக்குங்கால், அம்மங்கை தெவிட்டாத் தீங்கனியாய் இறைவனை நுகர்ந்து இன்புற்றாள்.

இவ்வாறு இறைவனது வடிவத்தைத் தன்னுள்ளத்தில் அழகொழுக எழுதிப் பார்த்து இறுமாந்திருந்த மங்கையினருகே ஓர் சின்னஞ் சிறு கிளி பறந்தோடி வந்தது. பசுமை நிறம் வாய்ந்த பைங்கிளி பறந்தோடி வரக்கண்ட பாவையினுள்ளம், அளவிறந்த ஆர்வத்தால் அப்பறவையின் மீது படர்ந்தது. அந் நிலையில் ஞானசம்பந்தரது—பாடல் நினைவிற்கு வர, அச் சிறு கிளியைச் செம்மையாய் நோக்கி,

"சிறையாரு மடக்கிளியே
இங்கே வா, தேனொடு பால்
முறையாலே உணத் தருவேன்
மொய் பவளத் தொடு தாளம்

துறையாரும் கடற்றோணிபுரத்து
ஈசன் துளங்கு மிளம்
பிறையாளன் திரு நாமம்
எனக்கொருகால் பேசாயோ"

"செந்தளிர்ச்சோலையில் அமர்ந்த சிறு கிளியே! கண்ணுக்கினிய இக் கற்பகச்சோலையில் அமைந்த கனிகளை உண்டு களிக்கின்றாய்! உனது அருமை அறிந்த நான் தேனும் பாலும் கலந்து தருவேனே! அமுதினும் இனிய உன் அழகிய மொழிகளால் என் தலைவனது திருப்பெயரைச்செவிகுளிரப் பேசாயோ!" என்று இறவாத இன்ப அன்பால் எடுத்துரைக்கும் முறை மிக அழகியதாகும். அழகுறப் பறந்து அருகே வந்தமர்ந்த கிளியின் சிறகுகள், மங்கையின் கண்ணையும் கருத்தையும் முந்திக் கவர்ந்தமையால், அச் சிறு கிளியை "சிறையாரு மடக்கிளியே" என்று சிறப்பிக்கின்றாள். தன்னோடு முன் பழகாத தன்மையால், அண்மையில் வர அஞ்சிச் சேய்மையில் வந்தமர்ந்த சிறு கிளியை நோக்கி, "குழலினும் யாழினும் இனிதாய் மழலைமொழி பேசும் இளங்கிளியே! அஞ்சாது என் அருகே வந்து நான் சொல்லும் மொழிகளைச் செவ்வையாய்க் கேட்டருள்வாய்" என்று அருமையாய் அழைக்கின்றாள். இன் மொழிபயிலும் இளங்கிளிக்கு இனிமை வாய்ந்த தேனும் பாலுமே ஏற்ற உணவாகும் என்று கருதி "தேனொடு பால் உணத்தருவேன்" என்று அன்போடு உரைக்கின்றாள். செழுஞ்சுவை பயக்கும் தேனையும் பாலையும் சேர்க்கும் முறையில் அளவுமிகுந்தாலும் குறைந்தாலும் சுவைபடாதாதலால் "தேனொடுபால் முறையாலே கலந்து அருந்தத்தருவேன்" என்று ஆர்வத்தோடு கூறுகின்றாள். இத்தகைய இன்னுணவருந்தும் கிளியிடம் ஓர் கைம்மாறு வேண்டுகின்றாள். "பவளம்போல் மேனியில்

பால் வெண்ணீறும், படர்ந்த சடையில் பிறை மதியும் அமைந்து இலங்கும் ஈசனது பெயரை இனிய மொழிகளால் எனக்கொருக்கால் பேசாயோ” என்று இரந்து வேண்டுகிறாள். இவ்வாறு தன் மனதுக்கினிய தலைவனது பெயரைக் கிளி மொழியாற் கேட்டு மகிழக் கருதும் மங்கையின் அன்பு எல்லையற்றதன்றோ? தன் தலைவனது பெயரைப் பேசும் பெருமை பெற்ற நாவினுக்கு நறுஞ் சுவை நிறைந்த நல்லுணவு அளிக்கக் கருதும் நங்கையின் மன நலம் மிக்க மாண்புவாய்ந்ததன்றோ? அம்மங்கைக்கு அமலன்பால் ஏற்பட்டுள்ள அளப்பரிய அன்பை, வாசகர்களே! மற்றுமோர்முறை வாசித்துப்பாருங்கள்!

* மூன்றாண்டு *

கோதைநாயகம்,
தேவகோட்டை.

சகிக்க முடியாத கொடிய கட்டுப்பாடுகளுள், மூன்றாண்டுகொண்டு விற்றலும் ஒன்றாக இருந்து வருகிறது. இதன் கொடுமை, அநுபவித்தோருக்குத்தான் தெரியும். முதலாளிகளுக்குக் கட்டுப்பாட்டைப் பற்றிய கவலை இல்லை. நினைத்தவுடன் கப்பலேறி விடலாம். கூட்டாளி ஸ்தானத்தில் இருக்கும் ஒவ்வொருவருக்கும், இக் கட்டுப்பாடு அதிக நஷ்டத்தையும், சிரமத்தையும் உண்டு செய்கின்றது; இன்னும் செய்துகொண்டே வருகின்றது,—என்பதைச் சிறிது ஆழ்ந்து நோக்குவோர்க்கு விளங்காமற் போகாது. நஷ்டம் என்று சொல்லியதைப் பொருள் நஷ்டம் என்று கொண்டால், அது என் தவறல்ல; கிடைத்தற்கரிய இளம் வாழ் நாட்கள் நஷ்டம்,—மழலை மொழி பேச, மக்களைப்பெற முடியாத நஷ்டம்,—இன்னும் பெருவாரி நஷ்டம். ஆனால், பணம் ஒன்று மட்டும் ஆதாயமே! பணத்தைக் கொண்டு இவைகளை ஈடு செய்து கொள்ள முடியுமா?

சம்பாதிக்கவும் வேண்டும். சுகமாய் மனைவி, மக்களுடன் இருக்கவும் வேண்டும். அயல் நாடுகளில் காலத்தைக் கழித்துவிட்டு, பணப் பையுடன் வீட்டுக்கு வந்து சுவிகாரம் செய்யும் நிலைமை ஏற்படச் செய்வது இந்த மூன்றாண்டுக் கட்டுப்பாடே யன்றி வேறென்ன?

ஆண்டுக் கணக்கில் மனைவியைப் பிரிந்து வாழ்வதில் ஏற்படக்கூடிய பெருத்த நஷ்டத்தையும் சொல்லித்தான் ஆகவேண்டியிருக்கிறது. மனுஷ ஜென்மந்தானே! இரகஸ்ய மாய் இன்பம் நுகர்ந்து கெட்ட மங்கையர்கள் பெருகிவரக் காரணமும் இந்த மூன்று வருஷக் கட்டுப்பாடுதான். அத் துடனுமல்ல— அயல் நாட்டிலே மூன்று வருஷம் சும்மா இருக்க முடியாமல், விபசாரம் செய்து அதனால் எத்தனை யோ ரோகங்களுக்கு இருப்பிடமானவர்களும், விபசாரக் குற்றத்துக்கு ஆளாகிப் பணத்தை வாரி இறைத்துத் தப்பித் துக் கொண்டவர்களும் பல நூறு பேர் இருக்கின்றனர்.

சம்பளம் சாமானுக்கு நிறைய வாங்கிக்கொண்டு வரப் போகின்றோம்,—என்கின்ற பணத்தாசை, அன்புத் தேவி யையும், ஆசை மக்களையும், தெய்வப் பெற்றோரையும், மூன் றாண்டுகள் பிரிந்து சாகாமற் சாகச் செய்கின்றது. பொறு மையுடன் இருந்து மூன்றாண்டு கட்குப் பின் திரும்பும் போது, மனைவியை இழந்தவர்கள் எத்தனை? மக்களை இழந் தவர்கள் எத்தனை? பெற்றோரை இழந்தவர்கள் எத்தனை? என்பதைக் கணக்கெடுத்துப் பார்த்தால், இத்துன்பந்தரும் மூன்றாண்டுக் கட்டுப்பாடு, கட்டோடு ஒழிய வேண்டியது தான் என்று யாவரும் ஒன்று போல் சொல்லுவர்.

எத்தனையோ நல்ல நல்ல கட்டுப்பாடுகள் செத்து மடிந்து, மண்ணோடு மண்ணாய்ப் போயும்கூட இந்த மூன்று வருஷக் கட்டுப்பாட்டுக்கு இன்னும் ஒன்றும் வாராதிருப்பது யார் செய்த பாவமோ! தெரியவில்லை.

"யாரையா சொல்வது.? இரண்டாண்டில் வரலாம் தானே"? என்று கேட்கிறீர்கள் போல் தெரிகிறது. "அப்

படி வாங்கள்—ஸார்! இரண்டாண்டில் வந்தால் சம்பளம் மட்டும்தான் கிடைக்கும். பிரயாணச் கமிஷன் (சாமானுக்கு) ஒன்றும் கிடைக்காது. பணத்தைப்பற்றி அவசியமில்லை என்று துணிந்து வந்துவிட்டாலோ, ஊரில் அறிமுகமானவர்கள் எழவு கேட்கிறாப்போல, என்னடா—வந்துவிட்டாய்! இரண்டு வருஷம் தானே ஆச்சு! பெண்டாட்டிக் கிறுக்கு—வந்துவிட்டாயாக்கும்!" என்ற அபத்தக் கேள்வி. எதற்குப் பயப்படுவது? பணத்தையும் விட்டுச் சொல்லையும் கேட்கவேண்டாமென்றுதான் இக்கட்டுப்பாடு உடைய வேண்டுமென்று சொல்வது.

ஒழுக்கம் தவறுமல் கொண்டுவிற்கும் ஒவ்வொருவருக்கும், இந்த மூன்று வருஷம் என்பது மூன்று தலைமுறை உற்றூர் பெற்றோரைப் பிரிந்து வாழுகின்றாற்போல வாட்டி எடுத்து விடுவதிற் சந்தேகமே இல்லை.

'இது கட்டுப்பாடாக இருக்கவில்லையே' என்று ஒரு சிலர் சொல்லலாம். வாஸ்தவம்தான். உருவில்லாமல், மாயாஸ்வரூபமாக, மூன்றாண்டுப் பேய் இருக்குமளவும் கட்டுப்பாடு இல்லை என்று சொல்லச் சாத்தியப்படுமா? என்று கேட்கின்றேன்.

ஹும் — மூன்றாண்டு அயல் நாட்டிலே வாசம் செய்து சம்பாத்தியம் செய்தும், இன்று வரை கையில் ஒன்றுமில்லாத எத்தனையோ அதிர்ஷ்டஹீனர்களும் இல்லாமல் இல்லை! பணமும் இல்லாமல், குழந்தைகளும் இல்லாமல், இனிய வாழ் நாட்களை விரயம் செய்த, இவர்களை எண்ணும் போது இந்த மூன்றாண்டுக் கட்டுப்பாடு கொடியது என்று எளிதிற் சொல்லலாம்.

இக்காலம் மூன்று வருஷமும் உயிரைவிட்டுச் சம்பாதிக்கும் பணம் வீட்டிலே ஒரு விசேடம் செய்யவாவது போதுமா? போதாது,—என்பது தெரிந்தும், என் மனைவி மக்களைப் பிரிந்து மூன்றாண்டு கஷ்டப்படவேண்டும்?

இன்னும் பாருங்கள் - ஒரு கணக்கு எப்படியோ பல்லைக் கடித்துக்கொண்டு ஒழுங்காய் இருந்து, ஒருவன் நல்ல சாமான் சம்பளம் பெற்றுக் கொண்டு வந்து, வீட்டில் கொஞ்சகாலம் இருப்போம்,—என்று எண்ணினால், விடுவார்களா! மாட்டவே மாட்டார்கள்! ' திரும்ப ஆறு மாதத்தில் வருவதாக இருந்தால்தான் சாமானுக்குத் தருவோம்" என்று சொல்லி வர்த்தமான லெட்டர் எழுதிவாங்கும் முதலாளிகளின் கருணையற்ற தன்மைக்குக் கூட்டாளிகளின் வாழ்நாட்கள் அர்ப்பணம் செய்யப்பட்டுத் திரும்பத் திரும்ப வந்து மூன்று மூன்று வருஷம் இருந்து சம்பாதித்து என்னதான் கோட்டை கட்டுகிறார்களோ? அறியோம்!

மூன்று வருஷமல்ல! முப்பது வருஷம் - சேர்ந்தாற் போல அயல் நாட்டிலே இருந்து வாழலாம். சம்பாதிக்கலாம். அதற்கு சம்பாத்தியத்தில் ஏற்படும் பல கஷ்ட நிஷ்டூரங்களைப் பரிகரிக்கும் வாழ்க்கைத் துணைவி அருகிருக்கவேண்டும். சோர்ந்த நேரத்தில் மனதை ஊக்குவிக்கும், ஸ்வரணவிக்கிரகமான தேவி உடனிருந்தால், அடடா! என்ன உற்சாகம் தோன்றும்! மனத்தாலே யாவது எண்ணுங்களேன்!

கூட்டாளிகள் உடனழைத்துச் செல்லவேண்டும். செலவு வருமே என்று பயப்பட்டால் ஒன்றும் நடவாது. பணத்தைச் சம்பாதிப்பது எதற்கு? செலவு செய்யத்தானே! பணத்தைப் பரப்பி அதன்மேல் படிப்பதற்கில்லையே!!

பிறகு ஏன் துணியவில்லை? அநாவஸ்யமான, ஆடம்பரச் செலவுகளை வேரோடு கல்லி எறிந்துவிட்டு இவைகள் செய்யலாம். இவ்வழிக்குச் சம்மதிக்கும் முதலாளிகளுக்குக் கூட்டாளிகளாய்ச் சேரவேண்டும். இல்லையேல், சொந்தமாக கையில் உள்ளதை வைத்துக்கொண்டு சர்வ சுகபோகமாய், சிக்கனமாய் இருந்து அயல்நாட்டிலோ, சொந்த நாட்டிலோ சம்பாதிக்கவேண்டும்.

நண்பர் ஒருவர் இருக்கிறார். அவர், வீட்டில் இருந்தால் மனைவி சும்மா இருப்பாள்; கொண்டுவிற்கப் போனாலோ—வியாதி வந்துவிடும். அவர் சம்பாத்தியத்தை நிறுத்த இஷ்டப்படாததால் அயல் நாட்டு வாசம் அதிகமாய்ச் செய்தார். மனைவி ஊரில் மருந்தும் கையுமாக இருப்பாள். நிறையச் சம்பாதித்தபடியால் டாக்டருக்கும் சளைக்காமல் கொடுத்தார். அவர் ஊரில் இருந்தால் மனைவிக்குச் சீக்கு வரவே வராது. போனாலோ சோம்பிவிடுவாள். என்ன செய்யலாம். சம்பாத்தியம் பூராவும் வைத்தியன் பொக்கிஷத்தில் நிரம்பியது. முளைத்த மயிர் நரைக்கும் வரை சம்பாதித்தும், அன்றிருந்ததில் அணுவும் கூடாமல் அப்படியே இருக்கிறார். குழந்தையுமில்லை. மேலும், மனைவியின் நோய்க்குக் காரண கர்த்தாவாகவும் ஆனார்.

இத்தகைய எண்ணற்ற தொல்லைகளுக்கு இடமான இந்த மூன்றாண்டுத் தனிவாசம் நீங்கவேண்டும்; இன்றேல் உடன் அழைத்துச்செல்ல அனுமதி வேண்டும்; ஏ! சக்தித் தெய்வமே, கிடைக்கச் செய்வாயா?

ஓம் சுத்த சக்தி ஓம்.

பண்டைத் தமிழரசரும் புலவரும்

பண்டித லெ. ப. கரு. இராமநாதன் செட்டியார்,
தமிழ் ஆசிரியர்,
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்.

இத்தண்டமிழ் நாட்டைப் பன்னெடுங்காலம் ஆண்ட பழந்தமிழ்க்குடி மக்களாகிய சேரபாண்டிய சோழர்களே, பண்டைத்தமிழரசராவார். இதனை "மண்டிணிதிடக்கைத் தண்டமிழ்க்கிழவர், முரசுமுழங்குதானைமூவர்" [புறம் 35] என்னும் வெள்ளைக்குடி நாகனார் பாடலான் உணரலாம். அவ்வரசர் காலத்திலிருந்த நல்லிசைப் புலவர்களே ஈண்டுப் புலவரெனப் பட்டவராவார். ஈண்டுக் குறிக்கப் பெற்ற காலம் சங்ககாலமாகும். அவ்வரசர்களின் கலைவன்மை, செங்கோன்மாண்பு, வீரத்திறன், வள்ளன்மை முதலிய சிறப்பியல்புகளையும், புலவர் பெருமக்களது உயர்ந்த பண்புகளையும், புலவர்மாட்டு அரசர் வைத்த நன் மதிப்பினையும், நட்பையும் சில எடுத்துக்காட்டுகளின் மூலம் விளக்குதலே இக்கட்டுரையின் நோக்கமாகும். இவற்றை உணர்தற்குப் புறநானூறு பதிற்றுப்பத்து முதலிய சங்க நூல்கள் துணையாவனவாம்.

இவற்றுள், அவ்வரசர்தங் கலைவன்மையைப் பற்றிக் கூறுங்கால், அதனைப் பிறர் புகழ்வதாகக் கூறும் எடுத்துக்காட்டைவிட அவர் தாமே பாடியிருத்தல் தக்க சான்றாகும். ஆதலின் சேரருள் பாலைபாடிய பெருங்கடுங்கோ, சேரமான் கணைக்கால் இரும்பொறை முதலியோரும், பாண்டியருள் ஒல்லையூர் தந்த பூதப்பாண்டியன், பாண்டியன் தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன் முதலியோரும்

சோழருள் சோழன் நலங்கிள்ளி சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவன் முதலியோரும் பாடியிருத்தல் சங்க நூல்களிற் காணப் படுதல் கொண்டு அவர்தங் கலைவன்மையை உணரலாம். பூதபாண்டியன் தேவி பெருங்கோப் பெண்டு பாடிய பாடல் புறநானூற்றிற் காணப்படுதலால் அவ்வரசர் மகளிரும் நன்கு கற்றுப் பாடலியற்றும் பெற்றி வாய்ந்திருந்தனர் என்பது புலனும். அவர்தஞ் செங்கோன்மாண்பை "நீதிமன்றங்களில் அறநெறி தவறிய ஒருவனை வைத்துக் கொடுங்கோல் செய்தேனாகுக" என ஒல்லையூர் தந்த பூதப்பாண்டியனும் "என் நிழலில் வாழும் குடிகள் தாம் சென்றடையும் நிழலைக்காணாது எம்மிறைவன் கொடியன் எனக் கண்ணீர்விட்டுப் பழிதூற்றுங் கொடுங்கோலேனாகுக" எனப் பாண்டியன் தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியனும் வஞ்சினங் கூறுதலானும், குடிமக்களை இறைவேண்டி இரக்கும் ஆண்மையில்லாத சிறியோன் அரசுரிமையைப் பெற்றால் அது அவனுக்குத் தாங்கமுடியாத கனமுடையதாகும்" எனச் சோழன் நலங்கிள்ளி கூறுதலானும், "நின்னிழல் வாழ்வோர் சூரியனது வெம்மை யல்லது வேறு வெம்மையை அறியார்" எனச் சேரமான் யானைக்கட் சேய் மாந்தரஞ் சேரலிரும் பொறையைக்குறுங் கோழியூர் கிழார் பாடுதலானும் பிறவற்றாலும் உணரலாம்.

அவர் தம் வீரத்திறனை "யமன் கோபித்துவரினும் அதனையும் மாற்றும் வலியுடையை" என ஓர் சேரனிடம் ஓர் புலவரும், "கருக் கொண்ட மகளிர் விரும்பி யுண்டாலல்லது பகைவரால் உண்ணப்படாத மண்ணையுடையை" என மற்றொரு சேரனிடம் மற்றொரு புலவரும் கூறுதலானும், "தேர் மொட்டிற் பொலிவுபெற நின்றவன் யாவனோ

அவன் கண்ணிவாழ்க, ஐம்படைத்தாலிகழித்ததுமிலன், பாலுண்டலை ஒழித்து உணவும் இன்றுதான் உண்டான், தன்மேல் வெகுண்டு வந்த வீரரை மதித்ததும் அவமதித்ததும் இலன், அவரைத் தான் கொன்றதற்கு மகிழ்ந்ததுவும் இவ்வாறு செய்தோம் என்று தன்னை மேம்பட நினைத்ததுவுமிலன்'' என ஓர் பாண்டியனை ஓர் புலவர் பாராட்டுதலாலும்; ''சோழனோடு மாறுபட்டோர் வாழக்கண்டதுமில்லை, அவன் அடியடைந்தோர் வருந்தக்காணுதல் அதனினும் இல்லை'' என ஓர் சோழனை ஓர் புலவர் புகழ்தலாலும் அவர் தம் வெற்றியுணர்த்தும் பிற வரலாறுகளானும் நன்கு தெளியலாம். அவர் தம் வள்ளன்மையை ''இந்திரர் அமிழ்தம் இயைபினும் தனித்துண்ணார், யாரிடத்தும் வெறுப்பிலர், புகழ்கிடைக்கின் தம்முயிரையுங் கொடுப்பார், பழிவருமாயின் அதனால் உலகமுழுதும் பெறினும் கொள்ளார், அத்தகைய தமக்கென முயலாதவலிய முயற்சியையுடைய பிறர்க்கென முயல்வார் உண்மையால் இவ்வுலகம் உளது'' எனக் கடலுண்மாய்ந்த இளம்பெருவழுதி கூறுதலானும், ''ஈயென இரப்பாராயின் என் அரசாட்சியைக் கொடுத்தல் எளியது என் இனிய உயிரையுங் கொடுப்பேன்'' எனச் சோழன் நலங்கிள்ளி கூறுதலாலும், ''நின்னைப் பாடிய செந்நாப் பிறர்புகழைச் சொல்லா வண்ணம் நினக்கென் ஒன்றையும் பாதுகாவாமற் கொடுக்கும் எங்கோவே'' என ஓர் சேரனிடம் ஓர் புலவர் கூறுதலானும் நன்கறியலாம். இன்னும் சேரர்தம் கொடைப் பெருமையைப் பதிற்றுப்பத்தில், ஒரு சேரன் ஒரு புலவர்க்கு நாற்பது நூறாயிரம் பொன் கொடுத்துத் தான் ஆள்வதிற் பாகம் கொடுத்தான் என்பதும் மற்றொரு சேரன் மற்றொரு புலவர்க்கு நூறாயிரங் காணங் கொடுத்து ஓர் மலையிமேலேறி நின்று தன் கண்ணிற் கண்ட

னாடெலாம் கொடுத்தானென்பதும் பிறவும் காணப்படுதலி லிருந்து நன் கறியலாம்.

இவ்வாறே ஒவ்வொரு பண்பையும் விரித்துக் கூறின் பெருகுமாதலின் இன்றியமையாத சில கூறிய இவ்வளவில் நிறுத்திப் புலவர்தம் சிறப் பியல்புகளைத் தொகுத்துக் கூறு வாம்.

“பீடின் மன்னர்ப் புகழ்ச்சி வேண்டிச்
செய்யா கூறிக் கிளத்தல்
எய்யா தாகின்றெஞ் சிறுசெந் நாவே” (புறம் 148)

என ஓர் புலவரும்,

“வையக வரைப்பிற் றமிழகங் கேட்பப்
பொய்யாச் செந்நா நெளிய வேத்திப்
பாடுப வென்ப பரிசிலர்” (புறம் 168)

என ஓர் புலவரும் பாடுதலால் இல்லாதவற்றைச் சொல் லாத பொய்யா நாவினர் என்பதும்,

“இன்றும், பாணன் பாடினன் மற்கொல்” (புறம் 99)

எனப் பாணரை ஒளவையாரும்,

“பொய்யா நாவிற் கபிலன் பாடிய
மையணி நெடுவரை” (புறம் 174)

எனக் கபிலரை நப்பசலையாரும் புகழ்ந்திருத்தலால் பொரு ளையின்றிச் சிறந்தாரை உயர்த்துக் கூறும் நல்லியல் பினர் என்பதும், பெருஞ்சித்திரனார் அதியமானெடுமானஞ்சியு ழைச் சென்றபோது அவன் தம்மை நேரிற் காணாது இது

கொண்டு செல்க என்று பிறர் மூலம் பரிசில் கொடுப்பக் கொள்ளாது

“காணா தீத்த இப்பொருட்கு யானோர்
வாணிகப் பரிசில னல்லேன் பேணித்
தினையனைத் தாயினும் இனிதவர்
துணையள வறிந்து நல்கினர் விடினே” (புறம் 208)

எனக் கூறுதலானும், வெளிமான் தம்பி சிறிது பரிசில் கொடுப்ப அவர் கொள்ளாது சென்றமையாலும், சேரமான் குடக்கோச் சேரலிரும்பொறை பரிசில் கொடுப்பதற்குக் காலந்தாழ்க்க அதனை எதிர் பாராது பெருங்குன்றூர்கிழார் சென்றமையாலும், பிறவற்றாலும் தம்மை மதியாரிடத்தும், சிறிது கொடுத்தாரிடத்தும், கொடுப்பதற்குக் காலந் தாழ்த்தாரிடத்தும் பரிசில் பெறாத பெருந்தன்மையுடையர் என்பதும், இளங்கண்டீரக்கோவும் இளவிச்சிக்கோவும் ஒருங்கிருந்தவழிச் சென்ற பெருந்தலைச்சாத்தனார் கண்டீரக்கோவைத் தழுவி விச்சிக்கோவைத் தழுவாராக, அவன் என்னை ஏன் தழுவவில்லை எனக் கேட்டபோது, புலவர், உன் முன்னோர் பாடுநர்க்கு அடைத்த கதவுடையாராதலின் உன்னைத் தழுவவில்லை, கண்டீரக்கோ, மகளிரும் ஆடவரும் கொடையிற் சிறந்து விளங்கும் நற்குடிப் பிறந்தவனாதலின் அவனைத் தழுவினேன் எனக் கூறியதனால் புலவரை மதியாதவரைத் தாமும் மதியார் என்பதும், “வேந்தே, வெண் கொற்றக் குடை வெயில் மறைத்தற்குக் கொள்ளப்பட்டதன்று, குடிகட்கு நிழல் செய்தற்பொருட்டுக் கொள்ளப்பட்டது” எனவும், “புலவர்மாட்டுப் பொதுநோக்கொழிக” எனவும் பிறவுங் கூறுதலால் அரசர்க்கு உறுதியை அஞ்சாமற் கூறும் நெஞ்சினர் என்பதும், சோழன் நலங்கிள்ளி உறையூர் முற்றியிருந்தானையும் அடைத்திருந்த நெடுங்கிள்ளியையும்

சந்துசெய்தற்குக் கோவூர்கிழாரும், மக்கண்மேற் சென்ற கோப்பெருஞ் சோழனைச் சந்துசெய்யுநோக்கத்தாற் புல்லாற்றூர் எயிற்றியனாரும், வையாவிக்கோப் பெரும்பேகனால் துறக்கப்பட்ட கண்ணகியை அவனோடு சேர்த்தற்குப் புலவர் பலரும் பாடி யிருத்தலால் மாறுபட்டாரைச் சேர்க்கும் ஆற்றலும் நற்குணமும் வாய்ந்தவரென்பதும், பிறவும் புலவர் பெருமக்களிடத்தமைந்த சிறப்பியல்புகளாம்.

இனிப் புலவரிடத்து அரசர் வைத்திருந்த மதிப்பு எத்தகையதென்பதை உற்று நோக்கின் அது மிகவும் வியப்பைத் தருவதாகும். புலவர்மாட்டுச் சேரர் நன்மதிப்பை வைத்திருந்தனர் என்பதற்குச் சேரமான் தகடூரெறிந்த பெருஞ்சேரலிரும்பொறையின் வரலாறு ஒன்றேதக்க சான்றாகும். அஃதி யாதனின் — முற்காலத்து, அரசர் முரசில் தெய்வமிருப்பதாகக் கருதி அதை நீராட்டி அலங்கரித்துச் சிறந்த கட்டிலில் வைத்துப் பூசை செய்வதும் அக்கட்டிலில் யாரேனும் ஏறினால் அவர்களைக் கொல்வதும் வழக்கம்.

சேரமான் தகடூரெறிந்த பெருஞ்சேரலிரும் பொறையாலும் அவ்வியல் பிருந்தது. ஒரு நாள் வழக்கப்படி முரசு நீராட்ட எடுத்துச் செல்லப் பெற்றிருந்தது, அவ்வமயம் நெடுந்தூரமிருந்து அவன் வந்த மோசிகீரனார் எனும் புலவர் களைப்பு மிகுதியால் முரசு வைக்கும் கட்டில் என்பதறியாது அதில் ஏறித்துயின்றனர். அஃதறிந்த அரசன் புலவராதலின் அவரைக் கொல்லாததோடமையாது அவர் நன்கு துயிலும் வண்ணம் கவரிகொண்டு வீசினன். பின்னர் அது கண்ட புலவர் அவனைப் பெரிதும் பாராட்டினர் என்பதாம். அன்றியும் "தன் வெற்றிச் சிறப்பைப் புகழ்ந்து பாடுதற்கு இன்று கபிலரில்லையே" என்று சேரன் மாந்தரஞ் சேரலிரும்

பொறை வருந்தியதாகப் பொருந்தி லிளங்கிரனுர் கூறுவதும் அதனை வலியுறுத்துவதாம்.

"ஓங்கிய சிறப்பின் உயர்ந்த கேள்வி மாங்குடி மருதன் தலைவனாக உலகமொடு நிலை இய பலர் புகழ் சிறப்பிற் புலவர் பாடாது வரைக வென்னில வரை (புறம் 72) எனப் பாண்டியன் தலையாலங்கானத்துச் செருவென்றநெடுஞ்செழியன் பாடுவதனுல் பாண்டியர் புலவர்மாட்டும் அவர் பாடலிடத்தும் எவ்வளவு மதிப்பு வைத்திருந்தனர் என்பது புலனும்.

சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளவளவன் மலையமான் மக்களை யானைக்கிடுவுழிக் கோவூர்கிழார் கொல்லலாகாதென அவனைப் பாட அவன் கொல்லாது விட்டமையாலும், சோழன் நலங்கிள்ளி தம்பி மாவளத்தானும் தாமப்பல் கண்ணன் என்னும் புலவரும் வட்டாடும் போது புலவர் கைகாப்பச் சோழன் வட்டுக் கொண்டெறிந்தான், அவனைப் புலவர் வெகுண்டு நீ சோழன் மகனல்லை எனவைதனர், அது கேட்ட சோழன் புலவரைச் சினவாது நாணியிருந்தனன் என்னும் வரலாற்றுனும் சோழர்க்குப் புலவர் பாலிருந்த பெருமதிப்பு விளங்குவதாம்.

இனிக் கோப் பெருஞ் சோழனுக்காகப் பிசிராந்தையாரும் பொத்தியாரும் வடக்கிருந்து உயிர் துறந்த வரலாறென்றே புலவர்க்கும் அரசர்க்கும் இருந்த ஒப்புயர் வற்ற நண்பின் மாண்பை விளக்குவதாம். இவ்வரலாறு பலருமறிந்ததாகலின் விரிக்கப்படவில்லை.

இதுவரையுங் கூறிய வாற்றுல் பண்டைத் தமிழரசர் கலைவன்மை, செங்கோன் மாண்பு, வீரத்திறன், வள்ளன்மை

முதலிய வற்றாற் சிறந்து விளங்கின ரென்பதும், புலவர்தம் உயர்ந்த பண்புகளும், புலவர்பாற் அரசர்கட்கிருந்த பெரு மதிப்பும் நண்பும் புலனும்.

எனவே, பெருஞ் செல்வராய பண்டைத் தமிழரச ரெல்லாம் செல்வத்தால் வரும் இன்ப மொன்றையே கருதிச் செருக்கில் மூழ்காது, கல்வியின் அருமை யுணர்ந்து நன்கு கற்றுக், கல்வியிடத்தும், கற்றார் மாட்டும் பெரிதும் மதிப்பு வைத்திருந்ததுபோல, இக்காலத்துச் செல்வர்களும் கல்வி யிடத்தும், கற்றாரிடத்தும் மதிப்பு வைத்து ஆதரிப்பார்க ளாயின் அதுவே இக்கட்டுரையின் பயனாகும்.

தமிழ்

ஸ்ரீ V. இராமநாதன்,
தேவகோட்டை.

பலவகைப் பதார்த்தங்களுடன் முப்பழமும் சோறும் தொடர்ச்சியாக உண்ணுங்கால், ஒரு தொக்கு, ஒரு துவையல், ஒரு வற்றல் குழம்பு ஆகியவை கொண்ட சாதாரணச் சாப்பாட்டில் விருப்பேற்படுவது இயல்பு. கொழுத்த விருந்தால் வேலையடைந்த உறுப்புக்கள், இந்தச் சாதாரணச் சாப்பாட்டால் சற்று வேலைக் குறைவுகொண்டு ஓய்வுகொள்ளத் தோதாகவிருக்கும். அஃதே போல், தமிழ்ப் பெண்மணிகளின் வீரம், சுதந்திர தேவிகள், சங்கீதத்தின் பெருமையும் நமது கடமையும், பாவையும் பைங்கிளியும், மூன்றுண்டு, பண்டைத் தமிழரசரும் புலவரும் ஆகியவாம் 'அன்பளிப்பு' விருந்துண்ட வாசகர்கள் மூளைக்குச் சற்று சிரம பரிகாரம் கொடுக்கவேண்டுவது, சாரதா பிரசுர நிலையத்துடன் நெருங்கிய தொடர்புள்ள எனது கடமை. அதன் பொருட்டே, பின்னர்ச் சொன்ன சாதாரணச் சாப்பாடு போல் சமைத்த இக்கட்டுரை பிறந்தது.

தமிழைப் பற்றிக் கூறுமுன், தமிழ் நாட்டைப் பற்றிக் கூறவேண்டுவது அவசியம். வேதத்திலும் சரி கீதத்திலும் சரி—, வீரத்திலும் சரி தீரத்திலும் சரி,—நதியிலும் சரி கடலிலும் சரி,—காவியத்திலும் சரி ஓவியத்திலும் சரி,—இந்தத் தமிழ்நாடு தலை நிமிர்ந்து நிற்கும் வன்மை பெற்றதென்பது வெள்ளிடை விலங்கல். இன்னும் கூறிக்கொண்டே போகலாம். ஏட்டிலும் அடங்காத பாட்டிலும் அடங்காத அத்தனை புகழ் தமிழ்நாட்டில் மண்டிக்கிடக்கின்றது! மேலும் விவரிக்க இந்த ஏடு கிடந்தாராது.

—செல்வம்

எத்தனை யுண்டு புவி மீதே—அவை
யாவும் படைத்த தமிழ் நாடு.

என்ற பாரதியாரின் இந்தச் சிலவரிகள் மட்டும் போதுமான தாகும்.

இங்ஙனமாக நாட்டின் சிறப்பிருக்க, இதுபோழ்து மொழியின் சிறப்போ, கூறின்வெட்கம்; கேண்மின்!

ஒரு உத்தியோகசச்சாலை. அங்கு ஒரு வேலை காலி. அதற்கு ஆள் தேவை. விண்ணப்பங்கள் பல குவிந்தன. அவற்றுள் ஒன்று: அதில், "என் பாட்டன் அத்தாம் பெரிய உத்தியோகத்திலிருந்தவர்! என் தகப்பன் இத்தாம் பெரிய படிப்பாளி! ஆகவே எனக்கு காலியிருக்கும் வேலை யைக் கொடுக்கவேண்டுகிறேன்." என்ற வாறு எழுதப்பெற் றிருந்தது. பார்த்தார் அதிகாரி. அந்த மனுதாரியை வர வழைத்து, "நல்லது! உன் பாட்டன் நிலைமை, தகப்பன் சமாச்சாரம் எல்லாம் இருக்கட்டும்; இப்பொழுது உனக் குள்ள தகுதி என்ன?" என்று கேட்டார்.

அதேபோல, 'தமிழ்' என்று எடுத்துக்கொண்டு, 'எங் கள் தமிழ் அந்தக் காலத்தில் அப்படி இருந்தது,–இப்படி இருந்தது!' என்று பெருமை பேசுவதில் பயனில்லை. இன்று தமிழின் நிலை என்ன? என்பதை நினைத்தல் வேண்டும். அதிகம் கூறுவானேன்? தமிழ்த்தாய்,

—இனி

ஏது செய்வேன்? என தாருயிர் மக்காள்!
கொன்றிடல் போலொரு வார்த்தை—இங்கு
கூறத் தகாதவன் கூறினன் கண்டீர்!

என்ன கூறினன்? என்றால்,

"புத்தம் புதிய கலைகள்—பஞ்ச
பூதச் செயல்களின் நுட்பங்கள் கூறும்;
மெத்த வளருது மேற்கே—அந்த
மேன்மைக் கலைகள் தமிழினில் இல்லை.

இம்மட்டோ! இன்னும்,

சொல்லவுங் கூடுவதில்லை—அவை
சொல்லுந் திறமை தமிழ் மொழிக் கில்லை;
மெல்லத் தமிழினிச் சாகும்—அந்த
மேற்கு மொழிகள் புவிமிசை யோங்கும்"
என்றந்தப் பேதை உரைத்தான்—ஆ!
இந்த வசையெனக் கெய்திட லாமோ!

என்று தனது மக்களை நோக்கி அலறுகிறாள். அந்த நிலையில் நாம் எப்படி வாழ்ந்து வருகிறோமென்றால், கவனியுங்கள் பாரதி சொன்னதை.

பாமரராய், விலங்குகளாய், உலகனைத்தும்
இகழ்ச்சி சொலப் பான்மை கெட்டு
நாமமது தமிழரெனக் கொண்டிங்கு
வாழ்ந்திடுதல் நன்றோ!

ஏன் பேசாமல் இருக்கின்றீர்கள்? சொல்வீர்!

இம்மட்டோ? மற்றும் கேளுங்கள்!

ஊமையராய்ச் செவிடர்களாய்க் குருடர்களாய்
வாழ்கின்றோம்; ஒரு சொற்கேளீர்!

இனியும் கும்பகர்ணனுக்கு இடங்கொடுத்துக்கொண்டு வாளா விருப்பின், தமிழ் இருந்த இடம் எப்படிக் குறுகுமோ, ஈசனே அறிதல் கூடும்! ஆனால் மொழிவளர்ச்சிக்கு வழியில்லையா? ஏன் இல்லாமல்?

சாமி—சிதம்பரனார் சொல்வதைப்போல், 'இந்த நல் உலகம் எங்கணும் தமிழின் இசைதனைப் பரப்பிடல் வேண் டும். அல்லதோடு நம் மகாகவி சொன்னதைப்போல்,

தேமதுரத் தமிழோசை உலகமெலாம்
பரவும் வகை செய்தல் வேண்டும்.

* * *

சேமமுற வேண்டுமெனில் தெருவெல்லாம்
தமிழ் முழக்கம் செழிக்கச் செய்வீர்!

ஆம்! சொல்வது சொல்லலாம்! அதற்கு பாதை வகுக்க வேண்டுவதில்லையோ? என்று கேட்டால் நமது கவிக்குஞ்ச ரம் அதையும் விட்டாரில்லை.

சென்றிடுவீர் எட்டுத்திக்கும்—கலைச்
செல்வங்கள் யாவுங் கொணர்ந் திங்கு சேர்ப்பீர்!

* * *

பிறநாட்டு நல்லறிஞர் சாத்திரங்கள்
தமிழ் மொழியிற் பெயர்த்தல் வேண்டும்;
இறவாத புகழுடைய புது நூல்கள்
தமிழ் மொழியில் இயற்றல் வேண்டும்;
மறைவாக நமக்குள்ளே பழங்கதைகள்
சொல்வதிலோர் மகிமை யில்லை;
திறமான புலமையெனில் வெளி நாட்டோர்
அதை வணக்கஞ் செய்தல் வேண்டும்.

என்று சாற்றுகின்றார். மற்றும்,

திசையெலாம் சங்கம் அமைத்திட எழுமின்!
தென்மொழிப் புலவர்கள் பெயரால்,
வசை இலாத் திறல்சேர் வீரர்கள் பெயரால்,
வாய்மைசேர் வள்ளல்கள் பெயரால்,

இசைநிறை சோழர் பாண்டியர் சேரர்
இவர் திருப் பெயர்களால் எங்கும்
நகையுடன் கூடிப் போற்றுமின்! களித்தே!
நற்புகழ்த் தமிழ்க்குடிப் பிறந்தீர்!

என, சாமி சிதம்பரனார் வேண்டுகிறார். தடை இல்லை! எல்லாம் செய்யலாம்! அதற்கு......? ஏன் யோஜனை? கீழே நோக்குங்கள். யாவும் கை கூட,

நிதி மிகுத்தவர் பொற்குவை தாரீர்!
நிதி குறைந்தவர் காசுகள் தாரீர்!
அதுவு மற்றவர் வாய்ச்சொ லருளீர்!
ஆண்மை யாள ருழைப்பினை நல்கீர்!

என்று வேண்டி முடிப்போம். இன்னும் இக்கட்டுரையை நீட்ட விருப்பமில்லை. ஆதலான் தமிழ்த் தாய்க்கு ஒரு வணக்கம் சொல்லி நிறுத்துவோம்.

கன்னடமும் களிதெலுங்கும் கவின்மலையாளமுந் துளுவும்
உன்னுதரத் துதித்தெழுந்தே ஒன்றுபல ஆயிடினும்
ஆரியம்போல் உலகவழக்கு அழிந்தொழிந்து சிதையாவுன்
சீரிளமைத்திறம் வியந்து செயல் மறந்து வாழ்த்துதுமே.

ஓங்குக தமிழ்!